**ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, (தன்னாட்சி)**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருநெல்வேலி - 627012

பல்கலைக்கழக மானியக் குழுவின் 2 (எஃப்) & 12 (பி) அங்கீகாரம் மற்றும்

தேசிய தரமதிப்பீட்டுக் குழுவின்

மீள்தர மதிப்பீட்டில் “ஏ” தகுதி பெற்றது

(திருப்பராய்த்துறை, ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்தின் கிளை நிறுவனம்)

அரியகுளம், திருநெல்வேலி – 627011.

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**

இணைந்து நடத்தும்

# பாரத மொழிகளின் திருவிழா மற்றும் பாரதியார் பிறந்தநாள் விழா




திருநெல்வேலி ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி) மற்றும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இணைந்து 11.12.2023 திங்கள் கிழமை அன்று ‘**பாரத மொழிகளின் திருவிழா மற்றும் பாரதியார் பிறந்த நாள் விழா**’ நடைபெற்றது. இந்நிகழ்வு கல்லூரிச் செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா மற்றும் கல்லூரி ஆலோசகர் யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்களின் ஆசியுடனும், கல்லூரி இயக்குநர் பேராசிரியர் (மேஜர்) பொ. சந்திரசேகரன் அவர்களின் மேலான வழிகாட்டுதலோடும் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக யதீஸ்வரி முகுந்தப்ரியா அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். அவர் தம் உரையில் பாரதியின் பார்வையில் பெண்களின் சிறப்புகள் உயர்ந்தோங்கி இருப்பதை எடுத்துரைத்தார்கள். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் க. சிந்து அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். கல்லூரி முதல்வர் முனைவர் ந. கமலா அவர்கள் தலைமையுரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் பாரதியாரின் கவிதை வழி முழங்கிய வீர முழக்கம் குறித்து எடுத்துரைத்தார்கள். கணிதவியல் துறை ஆய்வு ஆலோசகர் முனைவர் க. இந்திராணி அவர்கள் விழா குறித்த நோக்கவுரை வழங்கினார்கள். தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த. தனலெட்சுமி அவர்கள் சிறப்பு விருந்தினர் குறித்த அறிமுகவுரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் மதுரை மாவட்டம் விவேகானந்த கல்லூரியின் மேனாள் விலங்கியல் துறைப் பேராசிரியர் க. சந்திரன் அவர்கள் ‘**பாரதியார் கண்ட பாரதீயப் பெண்மை**’ என்னும் தலைப்பில் சிறப்புரை வழங்கினார்கள். அவர்தம் உரையில் பாரதியார் பாடல்களிலிலும், கவிதைகளிலும் வெளிப்படும் சிந்தனை மிகுந்த கருத்துக்களை எடுத்துக்கூறினார்கள். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சார்பாக பாரத மொழிகளின் திருவிழா என்னும் பெயரில் நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவி து. கார்த்திகா முதல் பரிசாக ரூபாய் 5000/-ம், முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி உ.ஹெப்சிபா இரண்டாம் பரிசாக ரூபாய் 3000/-ம், இரண்டாமாண்டு வணிக நிறும செயல்பாட்டுத்துறை மாணவி பா. ஹரிணி, மூன்றாம் பரிசாக ரூபாய் 2000/-ம், இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவி மு.தங்க சர்மிளா ஆறுதல் பரிசாக ரூபாய் 500/- ம் சான்றிதழும் வழங்கப்பட்டது. பங்கேற்ற மாணவிகளுக்கு பங்கேற்பு சான்றிதழும், பேச்சுப்போட்டியில் நடுவர்களாக இருந்து சிறப்பு செய்த பேராசிரியர்களுக்கு சான்றிதழும் வழங்கப்பட்டன. கல்லூரி இயக்குநர் பேராசிரியர் (மேஜர்) பொ. சந்திரசேகரன் அவர்கள் மகிழ்வுரை வழங்கினார்கள். அவர் தம் உரையில் பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகளை எடுத்துரைத்தார்கள். இறுதியாக தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் சு. அபிலா சுந்தரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். கல்லூரிப் பண்ணோடு விழா இனிதே நிறைவு பெற்றது.